முருகப்பெருமான் துணை

**மகான் மானக்கஞ்சாற நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

24.03.2023, வெள்ளிக்கிழமை

1. அறத்தின் பெருமைதனை உலகுக்கு
   ஆற்றல்பட வரமாக அருளவே
   வரம்பெற்று வேலவன் சக்தியாக
   வாழுகின்ற அரங்கமகா ஞானியே
2. ஞானியே உன் பெருமை கூறி
   ஞாலமதில் சுபகிருது சேல்திங்கள்
   இனிமைபட தசதிகதி புகர் வாரம்
   (சுபகிருது வருடம் பங்குனி மாதம் 10 ம் நாள், 24.03.2023, வெள்ளிக்கிழமை)
   இயம்பிடுவேன் அனுகூல ஆசி
3. ஆசிதனை மானக்கஞ்சாற நாயனாரும்
   அகிலம் உய்வுற உரைப்பேன்
   வாசி வென்ற ஞானவான்களாக
   வாழும் மக்கள் நிலைகள் உயர
4. உயரவே சுத்த சன்மார்க்க
   உண்மை வழிகளை ஏற்று
   அயராது அரங்கமகானின்
   அறத்தின் வழிதனில் சேவை ஆற்றி
5. ஆற்றியே ஞானிகள் பூசையை
   அனுதினமும் தொடர்ந்து செய்து
   மாற்றமும் நல்ல தேற்றமும் தா என
   மனதார முழுசரணாகதி கொண்டு
6. கொண்டுமே முருகா அரங்கா என
   குவலயத்தார் வேண்டுதல் வைத்து
   தொண்டாற்றி வருதல் காண
   தெய்வபலம் கண்டு சிறந்து
7. சிறந்துமே உலகோர் பசிபிணி
   சேவைவழி விரட்டுவதுடன்
   பிறந்து மேலும் மேலும் தொடரா
   பிறப்பறுக்கும் சூட்சுமமும் விளங்கி
8. விளங்கியே குருவரங்கன் காட்டும்
   விசாலமான உபதேசம் வழி
   கலங்கமறத் தெளிவு கூடி
   கருணை வழி உலக உயிர்களை காத்து
9. காத்துமே கந்தவேலனையும்
   காட்சியாக நேரில் கண்டுத் தேறி
   உத்தமர்களாக ஞானவான்களாக
   உலகையே மாற்றும் சத்தியவான்களாக

10. ஆகவே அரங்க மகானின்
ஆற்றல் மிக்க தேர்வின் வழி
வகைபட ஞானிகள் ஆகவே
வளர்ச்சி மாற்றம் கண்டு

11. கண்டுமே இனி பிறவா பேறு
கலியினிலும் அடைந்து சிறப்பர்
தொண்டுவழியே உலகை மாற்றம்
தேசிகன் விரும்பும் ஞான ஆட்சிபடைப்பர்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–